DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.8/2025

**prosecution witness: LW–8 as PW–5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாகித் இஸ்ஹாக் | பதவி | : | சார்பு ஆய்வாளர், |
| த/பெ. | : | அமீர் | வயது | : | 36 |
| ஊர் | : | திருநெல்வேலி | சமயம் | : | இஸ்லாம் |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>06.01.2026</u>

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சாட்சி காணொலி வாயிலாக திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்ற காணொலி அறையில் இருந்து Quadinator முன்னிலையில் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை:–</u>**

1. நான் தற்போது திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நுண்ணறிவு பிரிவில் சார்பு ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.11.2023 ம் தேதி தனுஷ்கோடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குறிப்பாணை மற்றும் இராமேஸ்வரம் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் குறிப்பாணை படி மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் இருந்து மாறுதலாகி வரப்பெற்ற குற்ற எண் 31/2023 சட்டப்பிரிவுகள் 14(C) Foreigner Act r/w 3(a), 6(a) of Passport Rules 1950 வழக்கு கோப்பை பார்வையிட்டு 11.30 மணிக்கு தனுஷ்கோடி காவல் நிலைய குற்ற எண் 82/2023 சட்டப்பிரிவுகள் 14(C) Foreigner Act r/w 3(a), 6(a) of Passport Rules 1950 வழக்கு பதிவு செய்து இராமேஸ்வரம் கோவில் காவல் வட்டம் காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் பதிவு செய்த தனுஷ்கோடி காவல் நிலைய குற்ற எண் 82/2023 முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>1 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. தனுஷ்கோடி காவல் நிலைய குற்ற எண் 82/2023 முதல் தகவல் அறிக்கை பத்தி 3ல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.11.2023 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் பத்தி 4ல் எந்த காவல் நிலையத்தில் இருந்து மாறுதல் செய்யப்பட்டது என்று

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பத்தி 6 ல் தகவல் தந்தவர் பெயர் அகில் பதன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் பத்தி 8 ல் காலதாமதம் பற்றி ஏதும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் பத்தி 12 முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர்கள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் புகாரிலும் எதிரிகளின் பெயர்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2. ஆனால் நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை பத்தி 12 ல் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் சொலலப்படாத எதிரிகளின் பெயரை முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளது ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள விபரங்களுக்கும் இந்த எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் இரமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் இராமேஸ்வரம் காவல்துறை கண்காணிப்பாளர் அழுத்தத்தின் காரணமாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த முதல் தகவல் அறிக்கை புள்ளி விபரத்திற்காக பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH
Date: 2026.01.06 18:23:01 +0530